**செ. கு. எண்**: 268 **நாள்**:30.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

---

அறிக்கை – 30.7.2012

தேனி மாவட்ட குற்றப் பிரிவில் காவல் துணைக் கண்காணிப்பாளராகப் பணி புரிந்து வந்த திரு. பொ.செ.செல்வராஜ் அவர்கள் 28.7.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், மங்களமேடு காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. எம். செல்வம் அவர்கள் 28.7.2012 அன்று திருச்சிராப்பள்ளி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காவல் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவ்வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர புளியமரத்தின் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. செல்வராஜ் மற்றும் ஆய்வாளர் திரு. செல்வம் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பால் காலமான திரு. பொ.செ. செல்வராஜ், சாலை விபத்தில் காலமான திரு.எம். செல்வம் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**